# சிற்பங்களில் நாக வழிபாடு

**பி. எஸ். நடராஜன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், சிற்பத்துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்

நாக வழிபாடு என்பது தொன்றுதொட்டு வரும் வழிபாடு ஆகும். நாகத்தின் தன்மை பற்றியும், நாகத்தைப் பற்றியும் மக்களிடம் நிலவி வருகீன்ற நம்பிக்கைகளைப் பற்றியும், அவைகளினால் உண்டாக கூடிய நடுக்கம், இறப்பு போன்றவைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு மக்கள் நடத்திக் கொண்டு வருகிற பூசைகள் திருவிழாக்கள் பற்றியும், மக்களின் சிந்தனைகள் போன்றவைகளைப் பற்றியும் பல நூல்கள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன. உலகிலுள்ள நாகங்களைப் பற்றி L.R.Sharma (2008) என்பார் எழுதியுள்ளார். ஜி.சுப்பிரமணியம் பிள்ளை மர வழிபாடு மற்றும் நாக வழிபாடு (1948) பற்றி Tree Worship and Ophiolator என்ற புத்தகம் எழுதியுள்ளார். ஜேம்ஸ் பெர்குசன் மர வழிபாடு மற்றும் நாக வழிபாடு (1868) பற்றி எழுதியுள்ளார். ஜே.பி.வோகல் இந்திய நாட்டிலுள்ள பாம்புகளைப் பற்றிய கதைகள் அதன் தொடர்புடைய மக்களின் பழக்கவழக்கங்கள் பற்றி Indian Serpentlore (1926) என்ற புத்தகமாக வெளியிட்டார். B.C.Sinha (1980) தொன்மைக்கால இந்தியாவில் நிலவிய நாக வழிபாடு பற்றி எழுதியுள்ளார். இதில் சில தொல்லியல் சான்றுகள் கொண்டும், புராண இதிகாச

செய்திகளைக்கொண்டும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதில் புத்த சமயத்தில் நாக வழிபாடு எங்ஙனம் நிலவியது என்பதைத் தொல்லியல் சான்றுகள் மற்றும் ஜாதகக் கதைகள்கொண்டு எழுதியுள்ளார். க.ப.அறவாணன் நாக வழிபாடு (1988) பற்றி எழுதி உள்ளார். அவர் நாகம் பற்றிய நம்பிக்கைகள், உலக நாடுகளின் எங்கெங்கு எப்படி இதைப் பற்றிக் கருதுகின்றனர் எனவும் குறிப்பாகத் தமிழகத்தில் நிலவுகிற நாக வழிபாடு பற்றியும் எழுதியுள்ளார். இதில் சில தொல்லியல் சான்றுகள்கொண்டும் விளக்கியுள்ளார். இப்படியிருப்பினும் சிற்பத்தின் மூலமாக அறிந்துகொள்ள வேண்டிய செய்திகள் இருக்கின்றன என்பதின் அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

தொன்மைக்காலத்தில் நாக வழிபாடு உலகெங்கும் திகழ்ந்திருந்தன. இந்தியாவில் பழங்குடி மக்களிடம் நாக வழிபாடு இருந்தது. ஆரியர்கள் இந்தியாவிற்குள் ஊடுருவியதற்கு முன்பாக தொன்மைக்காலமாகவே இந்த வழிபாடு சிறப்புற்றிருந்தது. மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகச் சின்னங்களில் நாக வணக்கம் இருந்தற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இந்தியாவில் பொதுவாக நாக உருவச் சிலைகள் மற்ற தெய்வப் படிமங்களைவிட அதிகமாகவே காணப்படுகின்றன. நாகங்களினால் ஏற்படக்கூடிய இன்னல்களும் நடுக்கமும் இந்த வழிபாட்டை மேலும் வளர்த்தன. பாம்பு தீண்டி இறந்துவிடாமல் இருக்கவும் கெடுதல்கள் உண்டாகாமல் இருக்கவும் பூசைகள் புரிந்து, நாக பஞ்சமி கொண்டாடினர். அதனால் நாகங்கள் வேத காலத்தில் அரக்கர் கூட்டத்துடன் இணைத்துக் கருதப்பட்டு வந்தன. விருத்திராசூரன் என்ற பாம்பு அரக்கனை இந்திரன் அழித்தான் என்று வேதங்கள் இயம்புகின்றன (மேக்டோனல் 1981 : 152). நாகங்கள் நிறைந்த வனத்தை அர்ச்சுனன் காண்டீபம் என்ற வில் கொண்டு அழித்தான் என்கிறது மகாபாரதம். தன் தந்தையான பரிக்ஷி இறந்ததற்குக் காரணமான தக்ஷகன் என்ற நாகராசனைக் கொல்ல ஜனமேஜயன் பெரிய யாகம் நடத்தினான் என்றும், அந்த யாகத் தீயில் ஆயிரக்கணக்கான நாகங்கள் விழுந்து அழிந்தன என்றும் மகாபாரதம் கூறுகிறது. அதில் சில நாகங்கள் குதிரைகள் போன்றும் யானைகள் போன்றும் இருந்தன என்று மகாபாரதம் கூறுகிறது. (ஆதிபர்வம், பகுதி 52).

பிற்கால சம்ஹிதை இலக்கியங்களில் நாகங்களை இரண்டு வகைகளாகப் பிரித்து வழிப்பட்டனர். அதாவது நன்மை பயக்கக் கூடிய நாகங்கள், தீமை பயக்கக் கூடிய நாகங்கள் என்று பிரித்தனர். நன்மை தரக்கூடிய நாகங்கள் தெய்வங்களுடன் இணைந்து வழிபடப்பட்டன. வாசுகி மற்றும் சேஷன் போன்ற நாக அரசர்கள் நன்மையைப் புரிந்தனர் என்கின்றன புராணங்கள். வாசுகி என்ற நாகம் பாற்கடல் கடைந்து அமிர்தம் எடுக்கும் போது நாணாகப் பயன்படுத்தப்பட்டது என்று புராணங்கள் கூறுகின்றன. சேஷ நாகம் திருமாலின் ஆசனமாகவும், துயில்கொள்ளும் படுக்கையாகவும் கருதப்பட்டது. நன்மையைப் பயக்கும் நாகங்களை அலங்கார மற்றும் ஆபரணப் பொருளாக மக்கள் கருதினர். நாகக் குண்டலம், நாகமாலை, நாக ஆசனம், நாக வலையம், நாகப்பூணூல் போன்றவைகளைக்கொண்டு தெய்வப் படிமங்களைச் செய்தனர். கணபதி, கருடன் , அபராசிதன், அயக்கரீவன், காளி, காமாந்தக மூர்த்தி, மகாகாலான், மகாலெட்சுமி, பைரவர், நீலகண்டன், சதாசிவன், திரிமூர்த்தி, சிரிதேவி, வருணன் போன்ற தெய்வப் படிமங்களில் நாகங்கள் இருப்பதைக் காணலாம். நீலகண்டச் சிவன் கையில் நாகம்

ஒன்றினைக் கையில் பெற்றிருப்பார். பார்சுவநாதர், மானசர், தாரா, நாகர்ஜுனர், மாயா ஜாலகிராம அவலோகிதர், முசலிந்தபுத்தர் போன்ற பௌத்த படிமங்களிலும் நாகங்களைக் காணலாம். இவை நீர், நிலம், விசும்பு, போன்றவைகளில் சஞ்சரிக்கக்கூடியன என்கிறது சம்கிதை இலக்கியங்கள். ஒருடலில் பல தலைகள்கொண்ட நாக தெய்வத்தை உருவங்களுக்குக் குடைகளாகவும் பயன்படுத்தினர். அவைகளைத் தெய்வங்களுக்கு ஒளிவட்டத்தைக் கொடுப்பவைகளாக் கொண்டனர். இந்த நாகங்கள் தலையின் பின்புறம் இருந்து ஒளிவட்டம் போன்று திகழ்ந்ததினால் இவற்றைப் போக மண்டலம் என்று கூறினர் (ஜோஷி, 1979:47-61). உலகிலுள்ள இரத்தினக் கற்களுக்கு அதிபதியாகவும் பாதுகாவலராகவும் திகழ்வது நாகங்கள் என்று கருதினர். ஒளி உமிழ்கின்ற இரத்தினக் கற்கள் போன்றமைந்த ஒளி வட்டத்தைப் ''போக மண்டலம்'' என்று அழைத்தனர். பல்ஹராத், சாஞ்சி, அமராவதி சிற்பங்களில் இவற்றைக் காணலாம். நாகங்களைக் கொண்டு வட்ட வடிவமாகவும், முக்கோணங்களாகவும் சிற்பங்களில் கட்டப்பட்டன. பிற்காலங்களில் இவைவுயே கோலங்களாகக் காட்டும் பரிமாண வளர்ச்சி எய்தியன்; நாகபந்தம், அட்ட நாகபந்தம் போன்றவைகளை உருவாகின. நாகங்களின் தலை விரிக்கப்பட்டிருக்கும் நிலை விசிறி போன்ற அமைப்பினைப் பெறலாயிற்று. ஜைன மதத் தெய்வமான பார்சுவநாதரை இப்படியே அலங்காரம் செய்தனர். பலராமருக்கும் இத்தைகைய விசிறி போன்ற அமைப்பினைப்பெற்ற சிற்பங்களை வட இந்திய மாநிலங்களில் காணலாம். சாகரில் உள்ள அரிசிங்டிகௌர் அருங்காட்சியகத்தில் இதைக் காணலாம்.

**நாகங்களும் குறிப்பொருளும்**

நாகங்கள் சிற்பங்கள் நீரைக் குறிப்பால் உணர்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்டன. பிரளய காலத்தில் நீரில் மூழ்கிய பூமி தேவியைத் திருமால் வராக அவதாரம் எடுத்து மேலே கொணர்ந்தார் என்று புராணங்கள் இயம்புகின்றன. சிற்பங்களில் இவற்றைக் காட்டும்போது நீரைக் குறிப்பாக விளக்குவதற்கு நாகத்தைக் கீழ் காட்டி , வராக அவதாரம் எடுத்த திருமால் பூமியைத் தன் மூக்கில் தாங்கி நிற்பதைப் போல உணர்த்தினர். பாதாமி, எல்லோரா, ஐஹோலி போன்ற இடங்களில் உள்ள சிற்பங்களில் நாகராசனும், நாகினியும் திருமால் காலின் கீழ் செதுக்கப்பட்டிருக்கின்றன. முதன்முதலில் நாக நாகினிகளை (சர்பராஞ்சனி) அஜந்தா ஓவியங்களில் காணலாம் (சின்ஹா, 1979: புகைப்படம் எண். 25),

பாகவத புராணத்திலுள்ள கிருட்டிணரின் தெய்வீக லீலைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது காலியமர்த்தனன் என்று குறிப்பிடுவதுண்டு. யமுனை நதியில் ஆக்கிரமித்து வாழ்ந்து பெரும் தொல்லைகள் கொடுத்து வந்த காலியன் என்ற நாகத்தை அடக்கிக் கண்ணன் வெற்றிகொண்டான் என்கிறது. சிற்பங்களில் ஐந்து தலைப் பாம்பினைச் செதுக்கி, கண்ணன் அதன் தலையில் நடனம் புரிவது போன்று உள்ளவைகளைக் காணலாம். கிருட்டிணன் பொங்கியெழுந்த வெள்ளத்தினைத் தடுத்து யமுனை நதியைப் பாசனத்திற்குப் பயன்படும்வகையில் அதனை ஆளுமைப்படுத்தினார் என்று இதனைக் கொள்ளலாம். காலியன் என்ற அந்தப் பாம்பு விண்முட்டும் அளவிற்குக் கரும்புகையை கக்கிக்கொண்டு இருந்தது என்று புராணங்கள் கூறுவது பொங்கி எழும் அலைகளைக் குறிப்பிடுவனவாகக் கொள்ளலாம். திருமால் பள்ளிக்கொள்ளும்

பார்க்கடலைக் குறிப்பாக சிற்பத்தில் உணர்த்தினர். பாதாமியில் குகை மூன்றில் திருமால் பாம்புப் பீடத்தில் வீராசனத்தில் அமர்ந்திருக்கும் கோலத்தைக் காணலாம். மகாபலிபுரத்திலுள்ள ஒரு சிற்பம் வானுலக கங்கை பகீரதன் தவத்தின் காரணமாகக் கீழே இறங்கிவரும் சிற்பத்தைக் கொண்டுள்ளது. இங்கே நாகினி இறங்கி வருவது குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது. முதலையின் பிடியில் அகப்பட்ட யானையைக் காப்பாற்றுவதற்குக் கருடன் மீதமர்ந்து திருமால் வரும் காட்சியில் முதலையின் அருகில் நாகம் இருப்பதைக் காணலாம். அது நீர்நிலை என்பதைக் குறிப்பால் சிற்பி உணர்த்துகிறான். நீர் சூழ்ந்த உலகத்தைப் பாம்பு வளைத்துள்ளது என்று வேதம் கூறுகிறது (மேக்டோனல் 1981:152). எல்லா நீர்களையும் பாம்பு விழுங்கிவிடுகிறது என்கிறது. இடி, மின்னல், மழை இவைகளே நாகத்தின் ஆயுதங்களாகும் என்கிறது. இக்கருத்து பின்னாட்களில் மாறுபட்டு இடியோசை கேட்ட நாகம் போல என்ற கருத்துத் தோன்றி நடுக்கத்திற்கு உவமையாகப் பயன்பட்டது. கோவர்த்தன மலையைத் தாங்கிப் பிடித்த கண்ணன் இடி, மின்னலுடன் உலகத்தைத் தாக்க இந்திரனிடமிருந்து காப்பாற்றினான் என்கிறது. திருக்குறுங்குடி சிற்பத்தில் பாம்பு ஒன்று கண்ணனின் கால் பக்கம் இருப்பதைக் காணலாம். மின்னலைக் குறிப்பிடும்போது பாம்பு போல் சீறியது என்கிறது வேதம். ஆறுகளுக்கும் (springs) காஷ்மீரத்தில் நாகம் என்ற சொல்லைக் குறிப்பாகப் பயன்படுத்துகின்றனர். அதலபாதாளம் மற்றும் நாக உலகங்களைக் குறிப்பாக உணர்த்துவதற்கு நாகங்களையே புராணங்கள் குறிப்பிடுவனாக உள்ளன. மகாபாரத்தில் பாண்டவ சகோதரனான பீமனுக்கு உணவில் மயக்கமளித்து உடலைக் கட்டி ஆற்றில் இட்டனர் கௌரவர்கள் என்றும், அவன் அதபாதாளத்தில் மூழ்கும்போது நாகங்கள் தீண்டின. இருப்பினும் அவன் விழிப்புற்றான் எனவும், அங்கே நாகராசன் அவனை உபசரித்து அனுப்பிவைத்தான் என்கிறது. உணவில் உண்டான காய்கறி நஞ்சினை (vegetable poison) பாம்பின் நஞ்சு முறியடித்தது என்கிறது மகாபாரதம். பாம்பு தன் தோலை உரித்தும், மீண்டும் புதியதாகத் தோற்றுவித்தும் இருக்கும் தன்மை பிறப்பு இறப்பிற்கு உவமையாகக் கொள்ளப்பட்டது. பீமன் இறந்து மீண்டான் என்பதை இது காட்டுகிறது. ஆழ்கடலைக் காண்பிப்பதற்கும் நாகத்தைக் குறிப்பால் உணர்த்தினர். இவற்றையே வராக அவதாரம் எடுத்த திருமாலின் கதையிலிருந்தும் உணரலாம். திருமாலின் அவதாரமான பலராமர் அனந்த நாகத்தின் அவதாரமாகும். நீர் நாகராஜாவும் நீர் நாகராணியும் சமண தெய்வமான பார்ஸ்வநாதரை வணங்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**மர வழிபாடும், நாக வழிபாடும்**

வேத காலத்தில் மக்கள் காடுகளை வழிபட்டு வந்தனர். வன தேவதையை ஆரண்யானி என்று அழைத்தனர். அங்கேயிருந்த மிகப்பெரிய மரங்களை வழிபட்டு வந்தனர். மரங்களே காய், கனி தருவதினாலும் விவசாயம் செய்யாமலேயே வனங்கள் அதிக பலன்களைத் தருவதினாலும் அத்தகைய பெரிய மரங்களை வனஸ்பதி என்று அழைத்து வழிப்பட்டனர். அப்பெரிய மரங்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகு பட்டுப்போய்விட்டாலும் தொடர்ந்து அம்மரங்களுக்குத் தெய்வ அம்சம் இருப்பதாகக் கருதி வழிப்பட்டனர். பட்டுப்போன மரங்களைக் கந்து என்று தமிழ் மக்கள் அழைத்திருக்கலாம்

என்று இங்கே கருத இடமுண்டு. உளி (டங்கம்) மற்றும் கத்தி கொண்டு செதுக்கப்படாமல் இயற்கையாக உருமாறிய பட்டுப்போன மரங்கள் தெய்வ அம்சமாகத் திகழ்ந்தன. ஏதோ உளி மற்றும் கத்திகளைக்கொண்டு இழைத்த மரத்தூண்கள்தான் கந்து என்று கொள்வதற்கில்லை. இவைகள் சுயம்புவாகவும், விடங்கமாகவும் தோன்றிய தலமரங்களே கந்து என்று கொள்ளலாம்.

மரங்கள் காய்கனி ஈந்து மக்களுக்கு நன்மை புரிந்தன. மரங்களைச் சுற்றியுள்ள நிலையில் நாகங்களை வழிபட்டனர். பிற்காலங்களில் இவைகளுக்குக் கீழே விநாயகரையும் நாகத்தையும் பிரதிட்டை செய்து மக்கள் வணங்கினர். நாகத்தைக் குறிப்பாகப் பிள்ளைப் பேறில்லாதவர்கள் வணங்கினர். இவைகளை வணங்கினால் முன்கூட்டி அறிந்துகொள்ள முடியாதனவாகவும் குறிப்பாக உணர்த்துவனவாகவும் இருந்தன. இரகசியத்தின் உண்மைப் பொருளாக இவைகளைக் கொண்டனர். இதனால் இலிங்க வழிபாட்டிற்கு தொடர்பு படுத்தப்பட்டது. இலிங்க வழிபாடு என்பது ஆண்குறி வணக்கம் ஆகும். நாகத்திற்கும் இலிங்கத்திற்கும் ஒற்றுமையை நம் முன்னோர்கள் கண்டனர். இரண்டின் எழுச்சியும் வேகமும் ஒன்றாகக் கருதப்பட்டன. இலிங்கம் சீவ அணுக்களை வெளிப்படுத்துவது போல, பாம்பும் இரத்தினங்களை வெளிப்படுத்துகிறது. என்று கண்டனர். வேத காலத்தில் உலக உற்பத்திற்கு ஆதாரமான இலிங்கத்தை அல்லது சின்னதேவன் என்று வழிபட்டனர். வேத காலத்தில் சின்னதேவரை ஆசிரியர்கள் வெறுத்தனர் என்பதினால் அது முற்றிலும் திராவிட வணக்கமாகக் கருதப்பட்டு வருகிறது.

பெண்ணானவள் நாகத்தின் மணப்பெண்ணாகக் கொள்ளப்பட்டது. கிரேக்க நாட்டு அரசர் அலெக்ஸாண்டர் மற்றும் உரோமபுரி சக்கரவர்த்தி அகஸ்டஸ் போன்றவர்கள் பாம்பிலிருந்து தோன்றியவர்கள் என்ற வழக்கு உள்ளது. கிரேக்க நாட்டு அலெக்ஸாண்டர் இந்திய நாட்டின் மீது படையெடுத்து வரும்போது (கி.மு.327) தட்சசீலத்தில் நாக வழிபாட்டுக்குரிய சின்னங்கள் பல இருந்தன என்று அலெக்ஸாண்டருடன் வந்த எழுத்தாளர் குறிப்பிடுகின்றனர். (subrahanjan 2002:22). யோக சூத்திரத்தில் உள்ள குண்டலி சக்தி பெண் தெய்வமாகக் குண்டலினியும் ஆண் தெய்வமாக விநாயகரும் கருதப்படுகிறது. (பத்தர் 1974:143) குண்டலி சக்தி சுருண்ட நிலையிலிருந்து நிமிரின் பாம்புப் படம் விரித்து எழுந்து நின்றாற்போல் மூலாதாரத்தினின்று சகஸ்ரநாமம் வரையில் வியாபித்து சக்தி பிரகாசிக்கச் செய்யும் (ஆர்தர் அவலோன் 1974). இதன் காரணமாக விநாயகரையும் நாகத்தையும் ஒருங்கே பிரதிட்டை செய்யப்பட்டு மக்கள் வழிபட்டு வருகின்றன யோக நிலைகளான ஸ்திட்டானம் , மணிபூரம், அனாகதம், விசுத்தம், ஆர்னரு போன்ற இடங்களில் சக்தி தெய்வங்களாக முறையே சரசுவதி, இலக்குமி, பார்வதி, மகேசுவரி மற்றும் மனோன்மணி போன்றவர் கருதப்படுகின்றனர். இவைகளுக்கு ஆண்தெய்வங்களாக பிரம்மா, திருமால், ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் கொள்ளப்படுகின்றனர். ஏழாவது யோக நிலைக்கு அதிதேவதைக்கும் சக்தி தெய்வங்கள் இல்லை. இதன் காரணமாகவே ஏழு கன்னிமார்கள் என்றழைக்கப்படும் சப்தமாதர்களுடன் நாகமும் பிரதிட்டை செய்யப்பட்டு இருக்கிறது. பெண்ணாகடன் (தெ.ஆ.மா.) என்ற ஊரில் உள்ள பல்லவர் காலத்தில் கால சப்தமர்களுடன் நாகச் சிலைகளும் உள்ளதைப் பார்க்கலாம்.

**காவல் தெய்வங்கள்**

பாம்புகளின் உலகின் நான்கு எல்லைகளைக் காவல்களுக்கும் தெய்வங்களாகக் கருதினர். இவைகளைச் சில கோயில்களில் காணலாம். செய்யாற்றிலுள்ள (வ.ஆ.மா.) வேதபுரிசுவரர் கோயிலுக்கு எதிரில் அமைக்கப்பட்டுள்ள கோயில் தூண்களில் நாற்புறமும் நான்கு நாகங்கள் தாங்கிப் பிடித்த வண்ணமுள்ளன. கருநாடக மாநிலத்திலுள்ள பெலகாவி என்ற கோயிலின் நாற்புறமும் நாகங்கள் தாங்கிய வண்ணமுள்ளன என்று சில புராணங்கள் குறிப்பிடுகின்றன. இதனை நாகராஜ்ஜூ என்று அழைப்பர் (பட்டசாலி 1929.169).

**நாகங்களும் மலைகளும்**

நாகங்கள் மலைகளுக்கு உவமையாகவும் கொள்ளப்பட்டன. மலைகள் உயர்ந்து இருக்கும் பகுதிகளை நாகத்துடன் ஒப்பிட்டு இங்கனம் அழைத்திருக்கலாம். நாகலாந்து என்ற பகுதி மலைகள் சூழ்ந்த பகுதி என்றுதான் கொள்ளவேண்டும். இதைப்போல ஜப்பானில் உள்ள நாகசாகி என்பதையும் கொள்ளவேண்டும்.

நாக வணக்கமுள்ள இன மக்களை நாகர்கள் என்றே அழைத்தனர். ஆயிரக் கணக்கான நாகர்கள் வாழ்ந்ததாகக் கூறுவதுண்டு. மற்ற இன மக்களான பிசாசர்கள் குஷ்யர்கள், சித்தர்கள், கந்தவர்கள், அசுரர்கள், தைத்திரயர்கள் போன்று நாகர்களும், வாழ்ந்தனர். அருச்சினன் உலூகா என்ற நாக கன்னியைத் திருமணம் செய்துகொண்டு அரவானை ஈன்றாள் என்று மகாபாரதம் கூறுகிறது. கிராமப்புறங்களில் திரௌபதிக்கு விழா கொண்டாடுவர். நாகபுரி, நாகர்கோயில், நாகப்பட்டினம், நாகேசுவரசுவாமி கோயில் போன்ற இடங்கள் நாகவனத்துடன் தொடர்புப்படுத்துப்படுகிறது. இவைகள் நாக வழிபாட்டுக்குரிய தலங்களாகக் கருதப்படுகினற்ன. நாகத்தை அழித்து அதனால் உண்டான தோஷத்தைப் போக்கிய தலமாக இதனை ஏற்கலாம். நாகங்களை யானைகளுக்கு உவமைகளாவும் கருதினர். மானசா என்ற நாகினி தெய்வத்திற்கு யானை வாகனமாக உள்ளதைப் பார்க்கலாம். (பட்டசாலி 1929:220). வாசுகி என்ற நாகராஜனின் சகோதிரி என்று மானசாவை அழைப்பர். இத்தெய்வம்தான் மகாபாரத்தில் வரும் ஜரத்காரு என்றும் கருதுவர். மானசா என்ற பெண் தெய்வத்தின் சிற்பங்கள் வட மாநிலங்களில் இருக்கின்றன. தென்னிந்திய மாநிலங்களில இல்லை. இப்பெண் தெய்வத்திற்குப் பின்புறம் ஏழுதலை நாகம் படம் பிடித்து உள்ளதைப் போன்று சித்திரிக்கப்பட்டிருக்கும். தாமரைப் பீடத்தில் அமர்ந்து இருப்பவள் இடது கையில் பாம்பு ஒன்றினைப் பெற்றிருப்பாள். வலது பக்கம் மெலிந்த உடல் கொண்ட ஜரட்காருத இருப்பார். இடது பக்கம் மானசாவின் மைந்தனான் ஆசிதகன் இருப்பான். கல்கத்தாவிலுள்ள தேசிய அருங்காட்சியகத்திலுள்ள சிற்பமொன்றில் கணபதி சிறிய அளவில் காட்டப்பட்டு இருப்பதைக் காணலாம் (பட்டசாலி 1929 : படம் 72).

**சிற்பங்களில் நாகங்கள்**

பிள்ளையார் கையில் பாம்பு ஒன்றினைப் பிடித்தவண்ணம் உள்ள சிற்பங்கள் உள்ளன. இந்தச் சிற்பம் கி.பி.15ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம். சிவன்

தன் சடாமுடியில் நஞ்சினைக் கக்கும் பாம்பினையும் குளிர்ந்த நிலவையும் பெற்றிருக்கின்றார். பாம்பு உடல் கொண்டவர் பதஞ்சலி முனிவர் என்பதைச் சிற்பங்களும் இலக்கியங்களும் காட்டுகின்றன. இவரே யோக சூத்திரம் எழுதியவர் ஆவார். இவ்வாறே ராகு, கேது பாம்பு உடல் கொண்டவர்களாகக் காட்டப்படுகின்றன. இவர்கள் பாற்கடலில் உண்டான அமிர்தம் உண்டு தேவப் பதவியை அடைந்தவர்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. சிற்பங்களில் ராகு மனித முகத்துடன் நாக உடல் கொண்டும், கேது மனித உடலுடன் பாம்பு தலை கொண்டும் இருப்பவர்.

நாகத்தின் விரிந்து படம் எடுக்கும் பாங்கினைத் தூண்களில் வடித்தனர். இதனை நாக பந்தம் என்று அழைப்பதுண்டு. அமராவதி ஸ்தூபியைச் சுற்றிலும் பாதுகாப்பு அரணாகத் திகழ்வது நாகமாகும். காஞ்சிபுரம் மற்றும் மகாபலிபுரம் போன்ற இடங்களில் நாக ஸ்தம்பம் உள்ளதைப் பார்க்கலாம். கோயில்களின் கதவுகளில் நாகங்கள் பின்னிப்பின்னி மேல் நோக்கிச் செல்வதுபோல அமைக்கப்பட்டுள்ளது. இங்கே அலங்காரத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அலெக்சாண்டர் கன்னிங்காம் எழுதிய புத்தகத்தில் நாக வடிவத்துடன் உள்ள நாணயங்களைப் பற்றி எழுதியுள்ளார். அசோகர் காலத்திய எழுத்து வரிவடித்துடன் காடசா என்று எழுதப்பட்டுள்ளது. இது ஒருவேளை நாகங்களுக்குத் தாயாக விளங்கும் கந்துரு பற்றிக் குறிப்பிடுவதாகக் கொள்வர் (பானர்சி 1941 : 166)

**சிற்பங்களில் நாக வழிபாடு**

நாகத்திற்கும் பறவைகளின் அரசன் என்று கருதப்படும் கருடனுக்கும் தொடர்ந்து நடந்த பகை பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. கருடன் காசியப முனிவருக்கும் வினதைக்கும் பிறந்த மைந்தன் என்று மகாபாரதம் கூறுகிறது. விட்டுணுபுராணம் திதிக்குப் பிறந்தவள் கருடன் என்கிறது. காசியப முனிவரின் மற்றொரு மனைவியான கத்துருவுக்கும் வினதைக்கும் நிலவிய போட்டி காரணமாகத் தோல்வியுற்ற வினதை, கத்துருவின் அடிமையானாள். கத்துருவின் புதல்வர்களான நாகங்கள், இந்திர உலகத்திலுள்ள அமிர்தம் தங்களுக்குக் கிடைத்தால் வினதையை விடுதலை செய்வதாகக் கூறினர். இதனால் கருடன் பல இன்னல்களுக்குப் பின் அமிர்தம் கொணர்ந்து தன் தாயை மீட்டான் என்கிறது. இந்தப் பகை பல காலம் நீடித்தது. கருடனின் புதல்வன் மயில் என்கிறது மகாபாரம் (குலோத்தி 1978 : 182). அதனால் கருடனுக்கும் மயிலுக்கும் நிலவுகிற பகை தொடர்ந்து நடக்கிறது என்ற புராணக் கூற்றை விளக்க சிற்பங்கள் உள்ளன. ஹொய்சாள சிற்பம் ஒன்றில் கருடன் ஐந்து தலை நாகம் ஒன்றினை அழித்து மீண்டும் மற்றொரு ஐந்து தலை நாகத்துடன் போரிடும் பாங்கில் உள்ளதை பார்க்கலாம். இதைப்போல் முருகக் கடவுளின் வாகனமாகக் கருதப்படும் மயிலின் அலகுகளிலும் கால்களிலும் சிக்கித்தவிப்பது போன்ற நாகங்கள் சிற்பங்களில் காட்டப்பட்டுள்ளன. நாகங்களை அடக்கி வெற்றி கொண்டதற்கு அடையாளமாக நாக அரசர்களான வாசுகி, சேஷன், தகூஷ்சன், கார்கோடன், பத்மன், மகாபத்மன், சங்கபாலன், குளிகன் போன்றவர்களைத் தன் ஆபரண ரத்தினங்களாக அணிந்துள்ளார் என்று சிற்ப சங்கிரகம் என்ற நூல் குறிப்பிடுகிறது. (சாஸ்திரி 1916 : 64). ஒரு மானியத்தைப் பற்றிய நன்மை தீமைகளை அறிந்து கொள்வதற்கு மேற்குறிப்பிட்ட எட்டு

நாகங்களை வழிப்பட்டதாக பனிரெண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு குறிப்பிடுகிறது. (சாஸ்திரி 1916:251).

**முடிவுரை**

புராணங்களிலும் சிற்பங்களிலும் சிறப்பிக்கப்ட்டுள்ள நாக வழிபாடு இன்றளவும் போற்றப்பட்டு வருகின்றது. அது தொன்மைக் காலம் முதற்கொண்டு பல ஆயிரம் ஆண்டுகளாகப் போற்றப்பட்டு வருகின்ற வழிபாடாகும். நாகங்கள் பின்னிப்பிணைந்து நிற்கும் நாக உருவங்கள் சாதாரண கோல கோட்டோவியத்திற்கும் வழி வகுத்தன. பல்வேறு நம்பிக்கைகள் நாக உருவ வழிபாட்டிற்கு வித்திட்டுள்ளன. குழந்தைப்பேறு வேண்டி நிற்ப்பவர்கள் நாக வழிபாட்டினை மேற்கொண்டு வருகின்றனர். நாகங்களுடன் வழிபடப்பட்டு வருகின்ற தெய்வ உருவங்கள் பல உருவாக்கப்பட்டன. நாகலிங்கங்கள், காளீய கிருஷ்ணர், ஆதிசேஷன் பள்ளிகொண்ட பெருமாள் (புஜங்க சயன உருவங்கள்) நாகங்களைக் கைகளில் தாங்கிய தெய்வ உருவங்கள் அல்லது சிற்பங்கள் பல உருவாக்கப்பட்டு இருக்கின்ற போக்கினைக் காண முடிகின்றது. மர வழிபாடும், நாக வழிபாடும் இணைந்தே தமிழகமெங்கும் காணப்படுகின்றது. ஜீவாதார உற்பத்திக்கு உரியனவாக இவைகளின் வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**மேற்கோள் நூல்கள்**


- Arthus Aralo (1974) The Serpent _ Power: The Secrets of Tantric and Shaktic Yoga, Dever Publication.
- Aravanan .Ka.Pa. (1988) The Serpent Cult in Africa and Dravidian India, Pari Nilayam, Reprint 2008.
- Bhattasali (1929) Icongraphy of Buddhist and Bhahanical sculptures in the Dacca Museum, Dacca Museum, Dacca .
- Banerjea. JN. (1941) The Development of Hindu Iconography, Munshiram Manoharlal Pub., New Delhi.
- Macdonell.A.A (1981) History of Vedic Mythology, Sanjay Prakashan, New Delhi.
- James Fergusson (1868) Tree and Serpent Worship (Sanchi and Amaravathi), Allen Pub., India Museum, London.
- Joshi.N.P. "Early Forms of Siva" pp.47-61. Discourses of Siva (ed) Michael W.Meister.
- Fred.W.Clothy (978)Many Faces of Murukan: The History and Meaning of south Indian God, Mouton Pub., The Hague (University of Chicago 1968).
- Sastri. Krishna.H (1916) South Indian Images of God and Goddessess, Govt. Press, Madras.
- Sharma. L.R (2008) " Snakes of Medical Significance in India" Wilderness Environs Med 19:195-198.

- Sinha.B.C (1980) Serpont Worship in Ancient India, East West Pub. ISBN 0856920525.
- Subrahmania Pillai. G. (1948) "Tree Worship and Ophiolatory" Annamalai University, Annamalai Nagar.
- Subrahmanian.K.R (2002) The Origin of Saivism and its History in the Tamil nadu. Asian Educational Services, New Delhi.
- Virasami Pathar (1974) Temple and Its Significance, Nannailam.
- Gogel.J.Ph., Indian Serpent Lore, 1926. Cambridge University Press.